2—

வீட்டு வசதி

***6049—திரு. கே. குப்பன்:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவொற்றியூர் தொகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம், வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

திருவொற்றியூர் திட்டப் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அவசர சுனாமி மறு குடியமர்வு திட்டத்தின்கீழ் 3,616 அடுக்கு மாடிக் குடியிருப்புகள் ரூ.139.51 கோடி செலவில் கட்டி முடிவுறும் நிலையில் உள்ளது. இவ்வீடுகள் விரைவில் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளன என்பதை பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. குப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதித்தபோது மீனவ சமுதாய மக்களை மின்னல் வேகத்தில் காப்பாற்றிய ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்காக அம்மா அவர்களுக்கு மீனவ சமுதாய மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல 3,616 வீடுகள் கட்டிக் கொடுத்திருப்பதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களை அடையாளம் காணும்போது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் பாதிக்கப்பட்ட மக்கள் விடுபட்டிருப்பதால் அவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

2012 அக்டோபர் 31]

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் உட்கார்ந்து பேசுவது நல்லதல்ல, உட்கார்ந்து பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்கார்ந்துகொண்டு பேச வேண்டாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், கடந்த ஆட்சிக் காலத்தில் உண்மையான பயனாளிகளுக்குக் கொடுக்காமல், அவர்கள் கட்சிக்காரர்களுக்குக் கொடுத்திருக்கிறார் என்பதைத்தான் சொல்கிறார். அதுபோல் தவறுகள் நிறைய நடைபெற்றிருக்கின்றன. ஆதாரத்தோடு சொல்கிறேன், நொச்சிக்குப்பம் மற்றும் சுனாமி மறு குடியமர்வில் பயனாளிகளுக்கு வீடுகள் கிடைக்கவில்லை. (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: உறுப்பினர்கள் உட்காருங்கள். அமைச்சர் பதில் சொல்லிக்கொண்டிருக்கிறார். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லக்கூடாது. அதனால் நான் குற்றச்சாட்டு சொல்வதை விட்டுவிட்டு உறுப்பினருக்கு பதிலைத் தெரிவிக்கின்றேன். அப்படி ஏதாவது உண்மையான பயனாளிகளுக்குக் கிடைக்கவில்லை என்று உறுப்பினர் தெரிவித்தால் உண்மையான பயனாளிகளுக்கு வீடுகள் ஒதுக்கிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. குப்பன் அவர்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. உறுப்பினர்கள், ஏதோ நான் தவறான கருத்தைச் சொன்னதைப்போல அவர்கள் இங்கே எழுந்து பேசுகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு. கே. குப்பன்: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் ஒதுக்கப்பட்ட நிதி—மீனவ சமுதாய மக்கள் சுனாமியால்

பாதிக்கப்பட்டபோது பல்வேறு திட்டங்களைக் கொடுத்த ஒரே முதலமைச்சர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அம்மா அவர்கள் கொடுத்த நிதியால் கட்டிக் கொடுக்கப்பட்ட வீட்டை அடையாளம் காணுகிறபோது அரசியல் காழ்ப்புணர்ச்சி காரணமாக பாதிக்கப்பட்ட மீனவ சமுதாய மக்கள் இன்றைக்கு விடுபட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வீடுகளைக் கட்டிக் கொடுக்க வேண்டும் என்றுதான் அமைச்சரிடத்திலே நான் கேள்வியைக் கேட்டேன். அமைச்சர் அவர்களும் விடுபட்டிருந்தால் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும் அமைச்சருக்கும் நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. நல்லதம்பி அவர்கள்.*

முற்பகல் 10-25

திரு. கு. நல்லதம்பி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது எழும்பூர் தொகுதிக்குட்பட்ட கேசவபிள்ளை பார்க் குடிசை மாற்று வாரிய குடியிருப்புப் பகுதியில் உள்ள வீடுகள் பழுதடைந்துள்ளதால் புதிய கட்டடம் கட்டும் பணிகள் நடைபெற்று வந்தன. தற்போது புதிய கட்டடம் கட்டும் பணிகள் நிறுத்தப்பட்டுள்ளதால் அங்குள்ள மக்கள் அவதிக்குள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புதிய கட்டடங்களை அப்பகுதி மக்களுக்கு விரைவாகக் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல் எந்தத் திட்டமும் நிறுத்தப்படவில்லை, நடந்துகொண்டிருக்கின்றது. உறுப்பினர் சொல்கின்ற பகுதியில் உள்ள பழுதடைந்த வீடுகளுக்கு நிதியொதுக்கி பழுதுகளை சீர்செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

2012 அக்டோபர் 31]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

திரு. எம்.கே. அசோக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது வேளச்சேரி தொகுதியில் உள்ள திருவான்மியூர் குப்பம், ஓடை குப்பம் பகுதியில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் கட்டப்பட்டு முடியும் தறுவாயில் இருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதியில் வீடுகள் அவசியம் என்ற தேவை ஏற்படின் ஆய்வு செய்து நிதிநிலைக்கேற்ப தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 3, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

3—

முதியோர் இல்லம்

***581—திருமதி ஆர். சாந்தி:**

மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை ஒன்றியம், கொல்லிமலையில் முதியோர் இல்லம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?